**Deposition of witness**

**(Chapter XXII Code of Criminal Procedure)**

-------

**IN THE COURT OF DISTRICT MUNSIF, MELUR**

| | | |
|---|---|---|
| Calender | : | O.S.No.254/2009 |
| Preliminary Register | : | |
| Sessions | | |
| Deposition of Witness for | : | பி.வா.சா.2 திரு.ஜெயகாந்த் த.பெ.ஜோசப் |
| Court | : | District Munsif Court, Melur. |
| Name | : | |
| Father's name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of of the 15th day of March 2023

15.03.2023
O.S.No.254/2009

பி.வா.சா.2 திரு.ஜெயகாந்த் த.பெ.ஜோசப்

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**முதல் விசாரணை**

நான் மதுரை மாவட்ட நீதிமன்ற வளாகத்தில் கடந்த 30.04.2019 முதல் தற்போது வரை நகல் பிரிவில் கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்றத்தில் இருந்து இந்த வழக்கில் சாட்சியம் அளிப்பதற்கு வந்த அழைப்பாணையை பெற்றுக்கொண்டு நான் தற்போது சாட்சியம் அளிக்கின்றேன். இந்த வழக்கில் 11 மற்றும் 12 ம் பிரதிவாதி சார்பில் OP.No.117/1981 வழக்கின் Ex order நகல் கேட்டு கடந்த 25.09.2018 அன்று நகல் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அந்த மனுவானது 19.02.2019 அன்று மேற்படி Ex order சம்பந்தபட்ட கோப்புகள் அனைத்தும் விதிகளுக்கு உட்பட்டு அளிக்கப்பட்டு விட்டது என்ற காரணத்தை கூறி எங்களால் திருப்பப்பட்டுவிட்டது. மதுரை மாவட்ட நீதிமன்ற பதிவறையில் உள்ள பதிவறை எழுத்தர் மேற்படி கோப்புகள் அளிக்கப்பட்டு விட்டது என்று மேற்குறிப்பு செய்ததன் அடிப்படையில் எனக்கு முன்பிருந்த நகல் பிரிவு கண்காணிப்பாளர் 19.02.2019 அன்று உத்தரவின் பெயரில் நகல் மனு திருப்பப்பட்டுள்ளது. அந்த திருப்பப்பட்ட நகல் மனு என்னிடம் காண்பிக்கப்படுவது என்றால் சரிதான். அந்த ஆவணம் **பி.வா.சா.ஆ-9 ஆக** குறியிடு செய்யப்படுகிறது. (வாதி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது)